# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,581 — 1958 නොවැම්බර් 11 වැනි අඟහරුවාදා — 11.11.1958**

11,581 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை இலக்கம் 103

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (i) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் டொன் பிலிப் றூபசிங்க குணவர்தன, விவசாய உணவு அமைச்சர் ஆகிய யான், இக்கட்டளையால் எத்தொகையான நெல்லையும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து யாழ்ப்பாணப் பகுதி உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடமிருந்தோ அல்லது யாழ்ப்பாணப் பகுதி உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடமிருந்தோ பெறும் உத்தரவின் பேரிலும் தவிர, இல்லாவிடின் அவ்வுத்தரவுக்கு அளிக்கப்படும் நிபந்தனைகளின் பேரிலும் தவிர, கொண்டு செல்லவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாது எனத் தடை விதிக்கிறேன்.

இக்கட்டளையின் பொருட்டு "யாழ்ப்பாணக் குடாநாடு" என்பது பூனகரி-துணுக்காய் பிரிவின் வருமானக் காரியஸ்தரின் பகுதியும் பச்சிலைப் பள்ளி-கரைச்சிப் பிரிவின் வருமானக் காரியஸ்தரின் பகுதியின் கரைச்சிப் பிரிவும் தவிர்ந்த யாழ்ப்பாண வருமான மாவட்டமாகும்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ந் திகதி.

டீ. பீ. ஆர். குணவர்தன,
விவசாய உணவு அமைச்சர்.

---

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உப பிரிவினால் கீழ்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டவையென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

டீ. பீ. ஆர். குணவர்தன,
விவசாய உணவு அமைச்சர்.

கொழும்பு,
1958 ம் ஞு நவம்பர் மீ 7 ந் உ.

**அட்டவணை.**

| கட்டளையிட்ட திகதி | யாரால் கட்டளை இடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருள்களுக்குச் சேர் மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரம் செய்யப்பட்டது. |
|---|---|---|---|
| 23. 8. 58. .. | களுத்துறை மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | அரிசி .. | 27. 8. 58 ம் திகதியைக் கொண்ட 11,505 ம் இல. |

---

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் : ரி/14/58 — **உப உணவுப் பொருட்கள்.**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் உப விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) க்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு உப-விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), அன்ரன் ஹெருத்வெல் மெக்கெய்ஸர் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ந் திகதி வெளிவந்த 11,529 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ந் திகதி பிரசுரிக்கப்பட்ட ரி/13/58 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள், மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள் முதலியவைகளை பொறுத்த மட்டில் குறித்த முதலாம் அட்டவணையில் முறையே 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் காணப்படும் விலைகளை முதலாம் பத்தியில் குறிப்பிட்டுள்ள உருளைக்கிழங்கு பற்றிய எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், நிகர அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் சில்லறை வியாபாரிக்கு விற்கும் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். முதலாம் அட்டவணையின் முதலாம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்குக் கூடுதலாக 2 ம், 3 ம், 4 ம் பத்திகளின் தலைப்பில் சொல்லப்பட்ட இடங்களில் விற்றலாகாது ;

(3) முதலாம் அட்டவணையின் 3 ம் பத்தியின் கீழ் திருகோணமலை நகரசபை எல்லைக்குள் என விதிக்கப்பட்ட விலைகளை 2 ம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறிப்பிட்ட தொகைகளினால் அதிகரித்து அவ்விலைகளை 2 ம் அட்டவணையின் முதலாம் பத்தியில் காட்டப்பட்ட இடங்களில் முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளின் சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் காட்டப்பட்ட பொருளின் நிகர இருத்தல் ஒன்றை 2 ம் அட்டவணையின் முதலாம் பத்தியில் காட்டப்பட்ட இடங்களில் அதிகரிக்கப்பட்டிருக்கும் விலைகளுக்குக் கூடுதலாக விற்றலாகாது;

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக ;—

(அ) முதலாம் அட்டவணையின் முதலாம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு நிகர அந்தரைக்கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) முதலாம் அட்டவணையின் முதலாம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு நிகர அந்தருக்கு குறைந்த தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடடகளிலும் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடங்களில் முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட தொகை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(உ) பொருளின் விபரங்கள்.

(8) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது "அவோர்டுபோய்" எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(9) முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பொருள் விற்குமிடத்து இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(10) ஒல்லாந்திலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட பொருளை உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்ருக்கு) பத்து இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(11) சீனாவிலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை, ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 13 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(12) ஜப்பானிலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக் கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை, ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 25 இருத்தல் கழித்துக் கணக்கிடல்வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(13) மரப்பெட்டிகள் அல்லாத (கிறேற்ஸ்கள்) மற்றைய எவ்வித கொள்கலத்திலோ இருந்து உருளைக்கிழங்கு விற்பனை செய்யப்படின் விற்பனை விலை ஒவ்வொரு கொள்கலத்திற்கும் மொத்த இருத்தலிலிருந்து 3 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(14) இக்கட்டளையின் பொருட்டு "நிகர" என்பது உருளைக்கிழங்கின் கழிவு அல்லது வெற்று நிறைகுறைந்த மொத்த நிறையெனக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ந் திகதி திருகோணமலைக் கச்சேரியில், பி. ப. 3 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

அன்ரன் ஆர். மெக்கெய்ஸர்,
உப-விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
திருகோணமலை மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 |
|---|---|---|---|
| விபரம் | திருகோணமலைப் பட்டணமும் குடாக்கரை காரியாதிகாரியின் பிரிவில் ஒரு நிகர அந்தரின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை | திருகோணமலை நகரசபை வட்டாரத்தில் ஒரு நிகர இருத்தலின் ஆகக்கூடிய சில்லறை விலை | கொட்டியார் பற்றும் தம்பலகாமப் பற்று கட்டுக்குளப் பற்றுக் காரியாதிகாரியின் பிரிவுகளில் ஒரு நிகர அந்தரின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| உருளைக்கிழங்கு .. | 31 86 .. | 0 34 .. | 33 26 |

### இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>எல்லை | பத்தி 2<br>முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்ட பொருட்களின் திருகோணமலை நகர சபை எல்லைக்குள் விதிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க அதிகரித்த தொகை |
|---|---|
| கிராம விதானையின் பகுதிகள் : | |
| உப்புவெளி சாம்பற்றீவு | அதிகரிப்பு இல்லை |
| சீனன்வாடி, வெள்ளமணல், தம்பலகாமம், நிலாவெளி | 01 சதம் |
| சின்னக்கின்னியா, பெரியகின்னியா, குறிஞ்சாக்கேணி, உப்பார், கந்தளாய், மூதூர், அக்கரைச்சேனை, சம்பூர், மல்லிகைத்தீவு, கிளிவெட்டி, தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு, கும்புறுபிட்டி | 02 சதம் |
| கூனித்தீவு, ஈச்சலம்பத்தை, குச்சவெளி, பனிக்கற்றியாவ, கோமறங்கடவல | 03 சதம் |
| திரியாய், மதவாச்சியா, கல்கடவல | 04 சதம் |
| புல்மோட்டை | 05 சதம் |
| தென்னமரவாடி, பரணமதவாச்சியா | 06 சதம் |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

---

உணவு விலைக்கட்டளை இலக்கம் : எப். சீ. எம்/14. **உப. உணவுப் பொருட்கள்.**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு புத்தளம்-சிலாபம் உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), யோன் வின்சன்ற் ஞானப்பிரகாசம் ஆகிய யான் இக்கட்டளையால்—

1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ம் திகதியைக் கொண்ட 11,561 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ம் திகதி தமிழில் பிரசுரிக்கப்பட்ட எப். சீ. எம். 12 ம் இலக்கமுள்ள உணவு விலைக்கட்டளையை பின்வரும் முறையில் திருத்தியமைக்கிறேன் :—

(அ) 1 ம் பத்தியில் " விசேட இலங்கை " என்னும் சொற்களுக்குப் பின்னும், " வர்த்தமானப் பத்திரிகையில் " என்னும் சொற்களுக்கு முன்னும் " அரசாங்க " என்ற சொல்லைப் புகுத்தவும் ;

(ஆ) 2 ம் பந்தியை நீக்கி அதற்குப் பதில் கீழ்வருவனவற்றைப் புகுத்தவும். இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இறுத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்குக் கூடுதலாக புத்தளம் பரிபாலன எல்லைக்குள் விற்றலாகாது ;

(இ) 3 ம் பந்தியில் (அ) பிரிவில் " ஒரு பொருளை ஒரு " என்னும் சொற்களுக்குப் பின்னும், " அந்தரைக் கொண்ட " என்னும் சொற்களுக்கு முன்னும் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக " நிகர " என்ற சொல்லைப் புகுத்தவும் ;

(ஈ) 3 ம் பந்தியில் (ஆ) பிரிவில் " ஒரு பொருளில் ஒரு " என்னும் சொற்களுக்குப் பின்னும் " அந்தருக்குக் குறைந்த " என்னும் சொற்களுக்கு முன்னும் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப்பதிலாக " நிகர " என்ற சொல்லைப் புகுத்தவும் ;

(உ) அட்டவணையின் 3 ம் பத்தியின் தலை அங்கத்தை நீக்கி அதற்குப் பதில் கீழ் வருவனவற்றைப் புகுத்தவும்.

பத்தி 3
மொத்த வியாபாரி
யின் நிகர அந்தர்
ஒன்றின் ஆகக்கூடிய
மொத்த விற்பனை
விலை

1958 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 6 ம் திகதி, பிற்பகல் 4 மணிக்குப் புத்தளத்தில் கையொப்பமிடப்பட்டது.

யோ. வி. ஞானப்பிரகாசம்.
உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
புத்தளம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.